

- வாழ்வோம்

வலையோசை

சோஷியல் மீடியாவில் சுற்றி வரும் சுவாரஸ்யங்கள்... உங்களுக்காக!

பென்சில் ட்வீட்ஸ் JP

அப்படிப் போடு.. போடு.. போடு..
5000 கோடியை ஆட்டைய போடு கையாலே..
இப்படிப் போடு.. போடு.. போடு..
கல்லாப் பெட்டி கட்சிகளை வளைச்சிப் போடு பையிலே..
உன்னோட ஊரைச் சுத்தி எம்.எல்.ஏ.வை வாங்க வர்றேன்..
இந்த ஷோஃபா போதுமா..
த.வெ.க. வாஷிங் மெஷின் வேணுமா..

Pugal RK

விஜய் அங்கிளுக்கு வாக்களித்து, தமிழ்நாட்டுப் பெண்கள் யாருக்கு நல்லது செய்து இருக்கிறார்களோ இல்லையோ, ஜெயிலில் இருக்கும் குற்றவாளிகளுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். நினைக்கும்போது வெளியே போலாம் நினைக்கும்போது உள்ள வரலாம்.

Remo

கிளீனிக் பிளஸ், ஹெட் அண்ட் ஷோல்டர் எல்லாம் வழிய விடு. அண்ணன் வெற்றி ஷாம்பு வரார் ஃபயர் விடு.



Second Show

2 மாசம் முன்னால, 'மொத ராத்திரி' படம் ரிலீஸ் ஆனப்போ.. 'பக்ஸ் கேரக்டர் மட்டும் ரொம்ப செயற்கையா இருந்துச்சு.. எவனாச்சும் அப்படி லூசு மாதிரி, போட்டோவை தூக்கிட்டுத் திரிவானா?' -ன்னு friend ஒருத்தன் கேட்டான்..



'டேய், அப்படிலாம் ஊர்ப் பக்கம் வழக்கம் இருக்குடா.. இதெல்லாம் நடக்குறதுதான்'னு சொன்னதுக்கு, அவன் பெருசா நம்பல.

இப்போ இந்த வீடியோவெப் பார்த்துட்டு, விழுந்து விழுந்து சிரிச்சுட்டு இருக்கான்..

அவன் ஒரு அணில்ங்கிறது கூடுதல் தகவல்.

Elan

தற்குறிக் கூட்டம் 'மாற்றம்'னு சொல்லி ஆட்சிக்கு வந்ததுக்கு அப்புறம், விலைவாசி உயர்வு மாற்றம், மின் கொள்முதல் விலை உயர்வு மாற்றம், கொலைகள் உயர்வு மாற்றம்,கற்பழிப்பு எண்ணிக்கை உயர்வில் மாற்றம், கரண்ட் பில் விலை உயர்வு மாற்றம். அரிசி விலை உயர்வு மாற்றம்..

அதிதி

ஆட்சிக்கு முன் : தற்காலிகத்தை நிரந்தரமாக்குவோம்!
ஆட்சிக்குப் பின் : நிரந்தரத்தையே ஒப்பந்தமாக்குவோம்!
12,000 பணியை வடநாட்டுக்குத் தாரை வார்த்தது போதாதா? இப்போது OMCL மூலம் மொத்த அரசு வேலையையும் ஒப்பந்தமா? இதுதான் த.வெ.க. ஏமாற்று அரசியல்!

சிதம்பரம் வழிபாட்டு உரிமை!

சிதம்பரம் நடராஜர் கோயிலைப் பொது தீட்சிதர்கள் முறையாக நிர்வகிக்கவில்லை என்பதால், கோயில் நிர்வாகத்தைக் கண்காணிக்க ஓய்வுபெற்ற நீதிபதிகள் தலைமையில் நிர்வாகக் குழுவை அமைத்து, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கோயிலின் சொத்துகளை மீட்பது, வருமான கணக்குகளை முறையாகப் பராமரிப்பது, புராதனக் கட்டடங்களைப் பாதுகாப்பது எனப் பல்வேறு முக்கிய பொறுப்புகள் இந்தக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சிதம்பரம் கோயிலில் உள்ள கனகசபைமீது ஏறி பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய அனுமதிக்க வேண்டும் எனவும், கோயிலை தமிழ்நாடு அரசின் அறநிலையத் துறை நிர்வகிக்க வேண்டும் எனவும் பல்வேறு தரப்பினர் நீண்டகாலமாகப் போராடிவந்த நிலையில், 2009-ஆம் ஆண்டில், சென்னை உயர் நீதிமன்றத்தின் தனி நீதிபதி உத்தரவின் அடிப்படையில், 24 மணி நேரத்திற்குள் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் சிதம்பரம் நடராஜர் கோயிலைக் கொண்டுவந்தார், முத்தமிழறிஞர் கலைஞர்.

அதை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்ட நிலையில், அம்மையார் ஜெய லலிதா ஆட்சியில் உறுதியுடன் வாதாடப்படவில்லை என்பதால், 2014-இல் மீண்டும் தீட்சிதர்களிடமே கோயில் நிர்வாகம் சென்றது. இந்த நிலையில், 2022-இல் கழக அரசு, பக்தர்கள் கனகசபை மண்டபத்தின்மீது ஏறி தரிசனம் செய்ய அனுமதித்து, அரசாணை வெளியிட்டது. இதை ஏற்காத தீட்சிதர்கள், மீண்டும் சென்னை உயர் நீதிமன்றத்தை நாடி, "2014 உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, எங்களுக்குக் கோயிலை நிர்வகிக்கும் பிரத்யேக அரசியலமைப்பு உரிமை உள்ளது; இதில் அரசு தலையிடக் கூடாது" என்று முறையிட்டனர். இதில் கழக அரசு உறுதியுடன் வாதங்களை முன்வைத்திருந்தது.

இந்த வழக்கில்தான் நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், இ.மனோகரன் ஆகியோர் அடங்கிய அமர்வு, தற்போது உத்தரவிட்டுள்ளது. 2014-ஆம் ஆண்டு கோயில் நிர்வாகம் தீட்சிதர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பிறகு, அதன் நிர்வாகம் முறையாக நடைபெறவில்லை எனக் குறிப்பிட்ட நீதிபதிகள், கோயில் நிர்வாகத்தைக் கண்காணிக்க ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி வி.பாரதிதாசன், குழுவின் தலைவராகவும் ஓய்வுபெற்ற நீதிபதி ஆர்.சுரேஷ்குமார் துணைத் தலைவராகவும் மற்றும் ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி ராஜேந்திரன் ஆகியோரை நியமித்துள்ளது.

இதன்மூலம் பக்தர்களின் வழிபாட்டு உரிமையைப் பெற்றுத்தந்துள்ளது, திராவிட முன்னேற்றக் கழகம்.

ஃப்ளாஷ்பேக்



செயல்வீரர் சோ.மா.இராமச்சந்திரன் மறைந்தாரே!



பேராசிரியர். மு.நாகநாதன்

1977-ஆம் ஆண்டில்தான் அண்ணா நகர் சட்டமன்றத் தொகுதி முதன்முறையாகச் சென்னை நகரில் உருவாக்கப் பட்டது. அண்ணா நகர் தொகுதி யில், கலைஞர் போட்டியிட்டார். அப்போது, அப்பகுதியின் செயலாளராக சோ.மா. இராமச்சந்திரன் பணியாற்றினார். அவரின் துணையோடும் தோழமை உணர்வோடும் அந்தத் தேர்தலில், 50 கல்வியாளர்களும் மாணவர்களும் இணைந்து 45 நாள்கள் தொடர்ந்து பணியாற்றினோம். மிசா சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு, சிறையில் பல இன்னல்களை எதிர்கொண்டவர். கலைஞருக்குப் பின் அண்ணா நகர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். இந்தப் படம், அண்ணா நகர் தொகுதியில் இருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, கலைஞர் எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு நடந்த தேநீர் விருந்தில் எடுக்கப்பட்டது. அமர்ந்திருப்போர் : மு.நாகநாதன், கலைஞர், எழுத்தாளர் சாவி, அண்ணன் மாறன், சோ.மா. இராமச்சந்திரன்

– பேராசிரியர்.மு.நாகநாதன், தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழு முன்னாள் துணைத் தலைவர், சென்னை.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: தன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்தப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasara@gmail.com



தெரிந்து கொள்வோம்

1940 திருவாரூரில் நடந்த நீதிக்கட்சி 15-வது மாநில மாநாட்டில், ஆதிதிராவிடர் பெயர் தீர்மானம்.

1941 அண்ணாமலைப் பல்கலையில், தமிழிசை மாநாடு - `தமிழ்நாட்டில் தமிழில் பாடுங்கள்' எனத் தீர்மானம்.

1942 திருவாரூரில், `தமிழ்நாடு மாணவர் மன்றம்' என்ற அமைப்பைத் தொடங்கினார் கலைஞர்.

1944 ஈரோட்டில் தந்தை பெரியார் மாளிகையில், திராவிட மாணவர்கள் முதலாவது பயிற்சி முகாம்.

1947 அண்ணாவின் பெயரோடு `அறிஞர்' எனச் சேர்த்து, அழைக்கத் தொடங்கினர்.

1968 சென்னையில் உலகத் தமிழ் மாநாட்டினை நடத்தினார், முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034
Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Ph: 044 - 45849900